**UNDELIVERED ISSUES**

Please re-address all undelivered issues of the Morning Star to:-
The Manager, "Morning Star", Vaddukoddai.

# THE MORNING STAR

*Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. QB/59/300/26/82*

Established; 1841: A Christian Weekly : Published Every Friday

Vol. 144 JAFFNA, FRIDAY, 24th FEBRUARY, 1984 No. 8

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

*Subscription*

Inland: Rs. 50/- per

FOR ADVERTISEM

*Apply to:*
The Manager,
'Morning Star', Vaddukoddai.






## The Jaffna Diocesan Council

*The Thirty Seventh Annual Meeting* of the Jaffna Diocesan Council of the CSI will held from March 1 to 3, at Otley Hall, Iaffna College, Vaddukoddai. The Worship Service each day will be held at the Cathedral Church.

## Trinity College Prize Giving

Mr. E. L. Senanayake the Speaker was the Chief Guest and Mrs. Senanayake distributed the Prizes at the Trinity Prize Giving held recently. The following are extracts from the Report of the Principal. Rev. (Dr.) W. G. Wickremasinghe referring to the July crisis said "the July crisis, unprecedented in its nature and magnitude. shook the very foundations of our national life and challenged the credibility and stablity of our social and political structures. The sudden breakdown of discipline, law and order. naked brutality and wanton destruction resulted in panic and bitter suffering. It created a situation of suspicion, distrust and hatred between the two ethnic groups. This traumatic experience resulting from idiolising our ethnic heritage seemed to make mockery of our heritage, the hallmarks of which are tolerance and reverance for human life. Many school going children were innocent victims and their exposure to such danger and horror has killed their respect for the adult world."

He also expressed disappointment at the break down of the G. C. E. O/L Examination in December. A worse calamity was avoided by the discovery of the leakage of question papers before the conclusion of the Examination. Students should not be made victim of uncrupulous people who resort to unethical practices to make quick and easy money. It was a matter for great regret that there was a steady deterioration of discipline and honesty in the examination halls on account of blatant indifference and inefficieny of invigilators.

Master C. M. G. Daswatte, the Senior Prefect made the vote of thanks.

## Closure of Banks

Six People's Banks in the Northern Province were intended to be with effect from 18-2-84, according to a news item in *the Island* of 15-2-84. This follows the robbery of jewellery estimated to be worth 5 million rupees from the Chankanai branch of the Peoples' Bank on 13-2-84.

## The Saturday Review

The Directors of the New Era Publications Ltd., have appointed Mr. Gamini Navaratne as Editor to succeed Mr. S. Sivanayagam, the first Editor of the *Saturday Review*.

*For the Record*

## Flood Refugees in Jaffna

| | | Famlies | No. of people |
|---|---|---|---|
| 1. | Jaffna | 15 | 46 |
| 2. | Karaveddy | 660 | 3616 |
| 3. | Kopay | 672 | 2300 |
| 4. | Velanai | 652 | 3790 |
| 5. | Pt. Pedro | 615 | 3000 |
| 6. | Uduvil | 248 | 1200 |
| 7. | Sandilipay | 124 | 644 |
| 8. | Chankanai | 397 | 1588 |
| 9. | Chavakachcheri | 2060 | 9655 |
| 10. | Delft | 583 | 2328 |
| 11. | Kayts | 1883 | 11451 |
| | | 7909 | 39618 |

## The Immigration Department

The mad rush for passports after the ethnic violence of July 1983, has made the Immigration Department the most sought after Department in Sri Lanka. The branches in Kandy, Galle and Jaffna have now been closed. The congestion in Colombo is unprecedented.

The run on new passports to replace those burnt during the riots is now the major problem.

In the meanwhile crooks and confidence tricksters are also on the increase.

## The Vicar Murder Case

*The appeals* against the conviction and sentences in the Vicarage Murder Case will be filed before March 5. according to Mr. R. J. Obeyesekare, Senior Counsel for Rev. Mathew Peries. Mr. Cecil Gunawardhana will, it is learn, file the appeal for Mrs. Delrine Ingram. The 612-page tome was read by the Judges in turn — Mr. Tissa Bandaranayake (Chairman), Mr. P. Ramanathan and Mr. D. C. W. Wickremasekara.

Rev. Peiris (64) was a former Vicar of St. Paul's Church, Kynsey Road, Borella. He and Mrs. Delrine Ingram were sentenced to death on Wednesday (15-2-84) at 6.30 p. m. They were found guilty of murdering their spouses.

*At Rest*

We regret to record the death of *Dr. Arulpragasam Rajanayagam* of Chundicuii on 13-2-84. The Funeral Service was held at his residence on Tuesday 14-2-84 at Kachcheri, Nallur road, Jaffna.

The Archdeacon of Jaffna, the Ven. Sam Horsington officiated assisted by Rev. Joseph Sarvanandham Vicar of St. John's Church, Chundiculi. The remains were intered at the St. James Church Burial Grounds Nallur.

He leaves behind his son, Arul Manoharan of People's Bank, Jaffna and daughters Naveena Devanandhan, Vice-Principal, Chundiculi Girls' College, and Pavala Nandakumaran Attorney-at-Law.

## Hospital Sunday

After a torrential downpour of rain throughout the day. Nature allowed a brief respite for the doctors the nursing staff and the para-medical staff of the three Mission Hospitals in Jaffna — Green Memorial Hospital Manipay. Mcleod Hospital Inuvil and the Methodist Mission Hospital at Puttur — to light their candles and march in procession into the Uduvil Church to mark Hospital Sunday this year on 11-2-84.

Rev. S. N. Sugunanandhan, Presbyter of the Uduvil Church led the Service and preached the Sermon. Rev. D. R. Ambalavanar, Presbyter of the Manipay Church led the Dedicatory Prayer for the Staff of the hospitals.

The Bible Lessons were read by Dr. C. S. Mills of Green Hospital, Manipay and Miss Danforth, Sister Tutor at Mcleod.

Three special lyrics were sung by the choir of the Methodist Hospital, Puttur, the Mcleod Hospital, Inuvil and the Green Hospital, Manipay.

The Service ended with the congregation joining in the familiar hymn: *At Even Ere The Sun was Set* and the Bishop, the Rt. Rev. D. J. Ambalavanar pronouncing the Benediction.

## The Private Medical College

The North Colombo Medical College at Ragama, created history in medical education in Sri Lanka, when it engaged its third-year medical students to work with a group of general practitioners in Colombo, as part of their clinical practice.

NCMC sources said the students will work for three days a week with the GPs, at the end of which they will coduct a seminar at which they will discuss the experince they gained and any problems they confronted.

The first batch of students from the NCMC is expected to graduate as doctors in 1987.

*In brief*

- *The floods* in nine districts have destroyed paddy crops estimated at Rs. 975 million In Batticaloa (850 mm rainfall in February) alone. 5.5 million bushels of paddy valued at Rs. 227.5 million have been destroyed. 600 to 700 heads of cattle have also perished in the floods in the Eastern province.
- *The Tamil Manram* of the University of Jaffna collected a sum of one and a half lakhs for flood relief. The money includes a sum of Rs. 25,000 collected by a flag-day in the schools in Jaffna.
- *Mr. B. S. C. Ratwatte*, retired Supreme Court Judge has been elected President of the Trinity College OBA. He succeed Minister Gamini Dissanayaka.

## Police recover safe

Police on Sunday found the five-ton safe removed by robbers from the People's bank at Chankanai on the centre of the road at the Vallai junction. Atchuvely 8 miles from Chankanai.

Believed to have contained pawned jewellery worth of Rs. five million, it had been blasted open and emptied.

The robbery, on this occasion by armed men in military uniform was carried on February 13 night exactly one month after the Kattankudy raid on the People,s Bank in which pawned gold worth Rs, 32 million was robbed.

C. D. N. 21-2-84

## YMCA Camp

The National Council of YMCAs of Sri Lanka will conduct the 10th annual YMCA "3-R" Camp for young men and women between 18 and 30 years. It will be held from March 14 to 18 at the National YMCA / YWCA Holiday Camp Resort at Welimada.

The program includes self apraisal exercises, talks and discussions on leadership, personality development, national development, peace and national harmony and love and marriage.

*Weddings*

**Reginald Gnanendran — Maureen Swendrina**

The wedding of *Reginald Gnanendan* (Civil Engineer) and *Maureen Swendrina Mather* took place on Tuesday the 24th of January 1984 at C. S. I. Church Manipay. The Bridegroom is the son of the Late Mr. S. R. Arumanayagam and Mrs. G. Arumanayagam of Lawton Road, Manipay. and the Bride is the youngest daughter of the late Victor Mather and Mrs. Ratna Mather of Manipay.

Rev. D. R. Ambalavanar officieted, assisted by Rev. A, Jeyakumaran. The homily was preached by Rev. S. Sugunananthan. After the Service there was a reception at the Brides residence.

* * *

**Amirthanayagam — Blanchard**

The marriage of *Bobbsie Amirthanayagam*, son of Mr. V. Rajaratnam and the late Mrs. Rajaratnam of Hendala, Wattala, and *Audrie Rugitha*, daughter of Mr. & Mrs. E. S. Blanchard of Suthumalai South, Manipay. was solemnised at the Manipay Church on 12-1-84 at 4.00 p. m.

Rev. S. Manopavan officiated and performed the nuptial rites, assisted by the Rev, A. Jeyakumaran. Rev. A. C. Mathanaraj preached the homily.

# உதயதாரகை

**UTHAYATHARAKAI**

Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ்.] [வெள்ளிதோறும் வெளிவருவது.

"நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவம் எந்தக் குலத்துக்கும் இழிவாம்"

மலர் 144 ] 24 - 2 - 1984 [ இதழ் 8


## முயற்சியுடையோர் இகழ்ச்சியடையார்!

நமது வாழ்க்கையில் தோல்விகளும் ஏமாற்றங்களும் ஏற்படுவது இயல்பு. இவற்றைத் தாங்கமுடியாதவர்களே, பலவிதமான நரம்புக் கோளாறுகளினால் தாக்கப்பட்டு நிலைகுலைந்து விடுகின்றனர். தோல்விகளை எப்படிச் சமாளிப்பது என்று தெரிந்து கொண்டால், மக்கள் நலமுடனும், மகிழ்ச்சியுடனும், நீண்ட காலம் சுகவாழ்வு வாழ முடியும்

இன்று, நமது வாலிபர்களிற் பெரும்பாலானோர் இத்தகைய நோயினால் பீடிக்கப்பட்டிருப்பதை நாம் காண்கிறோம். பலவிதமான ஏமாற்றங்கள் தோல்விகளை அடைந்து, அவற்றை மேற்கொள்ளும் வழி அறியாது, மனவிரக்தியடைந்து, தமக்குத் தாமே தீங்கை வருவித்துக் கொள்வதையும் நாம் காண்கிறோம். இத்தகைய நிலையில் உற்றவர்களுக்கேற்ற ஆலோசனைப்பணி ஆற்றி, அவர்களைச் சரியான முறையில் வழிநடத்துவது திருச்சபையின் தலையாய கடமை.

நமக்கு வரும் ஒவ்வொரு தோல்வியையும் இறைவனிடமிருந்து வரும் செய்தியாக ஏற்றுக்கொள்ள வேண்டும். குறிப்பிட்ட ஒரு தோல்வியின் மூலம் இறைவன் ஏதோ ஒன்றை நமக்குக் கூறவிரும்புகிறாரென அறியவேண்டும். ஒரு வேளை அது நமக்கு நல்லதல்ல என்றோ, அல்லது இப்படிச் செய்வது சரியற்றதென்றோ அவர் கூறலாம். மனஞ்சோராது இதனை அறிய முயல்வது நல்லது.

நமது பிரச்சினைகளை நாம் தவறான முறையில் அணுகும்போது, பிரச்சினைகள் இன்னும் அதிகரிக்குமே தவிர குறைவதில்லை. நீங்கள் செய்ய விரும்பியதைச் செய்து முடித்த பின்னும் பிரச்சினைகள் தீராமல் இருக்கலாம். ஆகவே, தோல்விகள் அல்லது ஏமாற்றங்கள் ஏற்படும்போது, நீங்கள் அந்தச் செயலைச் சரியான முறையில் செய்யவில்லை என்பதை இறைவன் சுட்டிக் காட்டுகிறாரென்றே அறியவேண்டும்.

நிறைவேறாத ஆசைகளும், நம்பிக்கைகளும், அன்பானவர்களின் இறப்பும், தோல்விகளும், உங்களை ஏமாற்றமடையச் செய்யலாம். இறைவனின் சித்தம் முதலில் உங்களுக்கு ஏமாற்றத்தை அளிப்பது போல் தோன்றலாம். இருந்தும், முடிவில் அது உங்களுக்கு நலத்தையே அளிக்கும் என உறுதியாக நம்புங்கள். இறைவனின் திருவுளச் சித்தத்திற்கு நம்மை ஒப்புக் கொடுக்கும்போது, சரியான பாதையில் நடக்கும் திறனையும், உள்ளத்தில் சமாதானத்தையும் ஆறுதலையும் நாம் பெறலாம்.

அறிஞர் தொமஸ் அல்வா எடிசன் ஒருமுறை நிக்கல்-இரும்பு, மின்கலம் ஒன்றைத் தயாரிக்க முயன்றார். ஐம்பதாயிரம் சோதனைகள் செய்தபிறகும் அனைத்துச் சோதனைகளிலும் அவர் தோல்வியையே சந்திக்க நேர்ந்தது. 'இத்தனை முறை தோல்வியைச் சந்திப்பது உங்களுக்கு ஏமாற்றமாக இல்லையா?' என ஒருவர் எடிசனிடம் கேட்டார். அதற்கு அவர், 'இதிலென்ன ஏமாற்றம்? ஐம்பதாயிரம் வழிகளில் இந்தச் சோதனையில் வெற்றிபெற முடியாது என்பதைத் தெரிந்து கொண்டிருக்கிறேனே! எனவே எனக்கும் வெற்றிக்கும் உள்ள இடைவெளி ஐம்பதாயிரம் பங்கு குறைந்திருக்கிறது அல்லவா' என்றார். இறுதியாக அவர் முயற்சி வெற்றி கண்டது. அவரால் அந்த மின்கலத்தை வெற்றிகரமாகத் தயாரிக்க முடிந்தது. எடிசன் அதிமேதைதான்! ஆயினும், அவர் ஏமாற்றங்களைக் கண்டு மனந்தளராமல் தொடர்ந்து முயற்றதினாலேயே வெற்றிபெற்றார்.

இவ்வாறு, உங்களுக்கு ஏற்படும் ஏமாற்றங்களை வெற்றிக்குரிய படிகளாக எடுத்துக் கொள்ளவேண்டும். இது அரசியல் துறையிலும், வேறெந்த துறையிலும் கவனிக்கப்பட வேண்டியதாகும். 'உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து அவர்மேல் நம்பிக்கையாயிரு. அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்' (சங்கீதம் 37 : 5). ஏதாவது ஒரு பணியைச் செய்யும்போது அதன் விளைவு ஏமாற்றம் அளிக்குமானால் அந்தச் செயலில் வெற்றி பெறுவதற்கு இன்னும் ஏதாவது வழிமுறை இருக்குமா? என முயன்று பாருங்கள். அப்படியும் பயனில்லை என்றால் அந்தச் செயலைப் பற்றி நினைந்து கவலைப்பட்டுக்கொண்டிராமல், அதை முற்றிலும் மறந்து விடுங்கள்.

ஒருவேளை கடவுள் விரும்பாத வழிகளில் நீங்கள் செல்ல முயன்று கொண்டிருப்பதினால் ஏமாற்றங்கள் உங்களைத் தொடரலாம். ஆகவே ஜெபத்துடன் புது வழிகளில் செல்வீர்களாயின், ஒருநாள் வெற்றிகரமான, சரியான வழியை நீங்கள் கண்டுபிடிப்பது நிச்சயம், ஊக்கம் ஆக்கந்தரும். முயற்சி திருவினையாக்கும். பாடுபட்டவன் பட்டம்பெறுவது நிச்சயம். விடாமுயற்சி வெற்றி தரும். இறைவன் நமக்கென்று விதித்திருக்கும் வாழ்க்கை முறையை உணர்ந்து, அதில் முன்னே இறைவனின் துணையை நாடுங்கள்.

## செய்தித் திரட்டு

● "மக்கள் மீது நம்பிக்கையற்ற தலைவர்களே சர்வாதிகாரத்தை நிலைநாட்டுவசர்கள். ஆட்சியாளர் மீது மக்களுக்கும் மக்கள் மீது ஆட்சியாளர்க்கும் நம்பிக்கை இருக்கவேண்டும். இவ்வித பரஸ்பர நம்பிக்கை இருந்தால் மட்டுமே சுபிட்சம் மலரும்"

— பிரதமர் திரு. R. பிரேமதாசா (20. 2. வீ கே.)

● நெடுந்தீவிலிருந்து வந்த 'குமரபுரவி' என்ற படகிலிருந்து உடல் பெருந்தளிப்பு காரணமாக இப்படகின் சுமையைக் குறைக்கும் வகையில் சுமார் 200க்கு மேற்பட்ட கருவாட்டுப் பொதிகள் கடலினுள் வீசப்பட்டன. இப்பொதிகளின் பெறுமதி அறுபதாயிரம் ரூபாவாகும் என்று தெரிவிக்கப்பட்டது.

## இருண்ட கண்டத்தில் கிறிஸ்துவின் பரந்த ஒளி


எஸ். தேவபாலன் ஆர்னல்ட், பி. எஸ்ஸி, எம் ஏ.


இருண்ட கண்டமெனக் கருதப்படும் ஆபிரிக்க நாட்டின் மக்கள் இறைவனது மெய் ஒளியினால் கவரப்பட்டு, இயேசுகிறிஸ்துவை தமது சொந்த இரட்சகராக ஏற்றுள்ளனர். கிறிஸ்தவதாசர்கள் இக்கண்டத்தின் பல்வேறு மூலைகளிலும் நற்செய்தியைப் பிரசங்கித்ததின் பிரதிபலனாக அந்நாட்டுச் சபைகள் துரிதமாக வளர்ச்சியடைந்துள்ளன.

சாம்பியா நாட்டில் மூன்றாண்டுகளாக வசித்து அங்குள்ள மக்களது வாழ்க்கை முறைபற்றியும், குறிப்பாக கிறிஸ்தவ சபைகளின் வளர்ச்சி பற்றியும் நன்கறிந்து சுவைபட எழுதுகிறார் திரு. தேவபாலன் ஆர்னல்ட் அவர்கள். — ஆ. ர்.

"மத்திய ஆபிரிக்காவின் இருதயம்" எனவழைக்கப்படும் சம்பியா (Zambia) நாடு 290, 586 சதுர மைல்களையடக்கிய நிலத்தால் சூழப்பட்ட பிரதேசமாகும். பிரபல சம்பசி நதியின் பெயரால் இந்நாடு சம்பியா என அழைக்கப்படுகின்றது. இது வட-வடமேற்கு மூலையில் சயரே (Zaire) நாடு, வடகிழக்கில் தன்சனியா (Tanzania), மேற்கில் அங்கோலா (Angola), தெற்கில் ஸிம்பாவே (Zembabwe), கிழக்கில் மலாவி (Malawi), தென்மேற்கே மொசாம்பிக்கு (Mozambique) ஆகிய நாடுகளினால் சூழப்பட்டுள்ளது. இந்த நாட்டின் தென் மூலையில் உலகின் அதிசயங்களின் ஒன்றான பிரமாண்டமான விக்டோரியா நீர்வீழ்ச்சி அழகைக் கொடுக்கின்றது.

### சாம்பியா நாட்டின் அரசு

முன்பு வடரொடீசியா என அழைக்கப்பட்ட இந்நாடு 1964ம் ஆண்டு ஆங்கிலக் குடியேற்ற அரசிலிருந்து விடுதலையடைந்தது. அறுபது இலட்சம் (6 million) மக்களை ஒற்றையாட்சியின் கீழ் சிறப்பாக ஆளும் பெருமை ஜனாதிபதி டாக்டர் கெனத் கவுண்டா அவர்களையே சாரும். 1983ம் ஆண்டு ஒக்டோபர் 27ந் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலில் இப்பெரியார் 93% மக்களின் "ஆம்" (Yes) வாக்குகளைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

### கிறிஸ்தவத்தின் ஆரம்பம்

1847-ம் ஆண்டு மதிப்புக்குரிய வைத்திய மிஷனரியான டாக்டர் டேவிட் லிவிங்ஸ்டன் விக்டோரியா நீர்வீழ்ச்சியைக் கண்டுபிடித்ததைத் தொடர்ந்து சம்பியா, மலாவி, ஸிம்பாவே ஆகிய நாடுகளுக்கு கிறிஸ்தவம் பரம்பியது. இப்பெரியார் மிஷன் தாபனங்களை அமைத்து கிறிஸ்துவின் மெய் ஒளியை வைத்தியம், கல்வி, போதனை மூலம் அஞ்ஞானிகள் மத்தியில் பரப்பினார். இருளில் தீபமேற்றிய இவ்வடியானை நினைவுகூருமுகமாக அவர் முதலாவதாக சென்றடைந்த விக்டோரியா நீர்வீழ்ச்சிப் பகுதி இன்று "லிவிங்ஸ்டன்" என அழைக்கப்படுகின்றது. இந்நகரின் நூதனசாலையில் இவ்வைத்தியரின் ஞாபகார்த்தமான பல காட்சிப் பொருட்களை இன்றும் காணலாம்.

டேவிட் லிவிங்ஸ்டனைத் தொடர்ந்து பல்வேறு கிறிஸ்தவக் குரவர்கள், குறிப்பாக மெதடிஸ்த, ஸ்கொற்லாந்து சீர்திருத்த, கத்தோலிக்க அமெரிக்க இரட்சணிய சேனை, பெந்தகொஸ்து, சுவிசேஷக் குழு, ஆகிய திருச்சபையினர் நற்செய்திப் பணியை பரப்பி வருகின்றனர்.

### இன்றைய திருச்சபை

ஆங்கிலக் குடியேற்ற அரசின் காலத்தில் ஆபிரிக்க மக்களின் முன்னேற்றம் புறக்கணிக்கப்பட்டது. அவ்வரசு இந்நாட்டில் காணப்பட்ட செம்பு, உலோகப் பகுதியை (Copper belt) அடைந்து, சுரங்கங்களை நிறுவி உலோகத்தை எடுத்து வெளிநாட்டுக்கு அனுப்பும் நோக்குடன் ஆங்காங்கு பெரிய நகரங்களை நிறுவினர். நகரப் புறங்களில் வாழ்ந்த வெள்ளையரின் முன்னேற்றத்திற்காக கல்வி, சுகாதார, பொழுதுபோக்கு வசதிகளை ஆரம்பித்தனர். ஆபிரிக்கரின் முன்னேற்றத்தில் குறிப்பிடத்தக்க அளவு அக்கறை செலுத்தாமல், சிறப்பு மிகுந்த லுசாக்கா, கிற்வே, என்டோலா, கப்வே, லிவிங்ஸ்டன் போன்ற பிரமாண்டமான நவீன நகரங்களை நிர்மாணித்தனர்.

இந்நிலை ஒருபுறமிருக்க கிறிஸ்தவ மதக்குரவர்கள் மேற்கு நாட்டிலிருந்து வந்து காட்டுப் பிரதேசங்களில் மிஷன் தாபனங்களை நிறுவினர். ஆங்காங்கு பிரதம பாடசாலை, சிரேட்ட பாடசாலை, விடுதி, வைத்தியசாலை, விவசாயப் பண்ணை ஆகிய நிறுவனங்களை அமைத்து ஆபிரிக்க இளைஞரின் கல்வியறிவை உயர்த்தினர். பயம் நிறைந்த அஞ்ஞான வாழ்க்கை முறைகளிலிருந்து மக்களைப் பிரித்து கிறிஸ்துவின் ஒளியைக் காணச்செய்தனர். அவர்கள் அனைவருக்கும் ஆங்கிலக் கல்வியைப் புகட்டினர். இன்று சம்பியா நாட்டில் தலைவர்களும், பணிபுரியும் உத்தியோகத்தர்களும் இம்மிஷன் தாபனங்களில் கல்வி பயின்றவர்கள் என்பது பெருமைக்குரியதாகும். ஆபிரிக்க மக்களின் ஆங்கில மொழித் திறமை மிஷனரிக் கல்வியையே சாரும்.

### இன்றைய திருச்சபை

இன்று சாம்பியா நாடு 60% கிறிஸ்தவர்களைக் கொண்ட (ஏனையோர் அஞ்ஞானிகள்) கிறிஸ்தவ நாடாகத் திகழ்கின்றது. உயர் மட்டத்தின் அரசியல் தலைவர்கள் தொட்டு சாதாரண பாமரமக்கள் வரை கிறிஸ்துவின் நாமம் மக்களின் நாவில் சதா உச்சரிக்கப்படுகின்றது. உலகின் நாடுகளில் காணப்படும் பல்வேறு திருச்சபைப் பிரிவுகளும் இங்கு இயங்குகின்றன. சம்பியா ஐக்கிய திருச்சபை (United Church of Zambia), மெதடிஸ்த, பிறெஸ்பிறறீரியன், ஸ்கொற்லாந்து, சீர்திருத்த திருச்சபைப் பிரிவுகளை ஒன்றிணைத்த ஐக்கிய சபையாகும். கத்தோலிக்க திருச்சபையின் பல்வேறு குரவர்களின் பிரிவுகளும், கன்னியாஸ்திரி குழுக்களும் நடாத்திவரும் சிறப்புச் சேவை இங்கு குறிப்பிடத்தக்கது. எல்லாத் திருச்சபைகளும் சிறந்த கல்வித் தாபனங்களையும், வைத்தியசாலைகளையும் நடாத்தி ஆபிரிக்க மக்களின் முன்னேற்றத்தில் கண்ணுங் கருத்துமாக செயல்பட்டு வருகின்றன.

### திருச்சபையின் தூதுப்பணி

திருச்சபையின் தூதுப்பணி ஆபிரிக்க மக்களை இருள் நிறைந்த பயங்கரமான அஞ்ஞானக் கொள்கைகளிலிருந்து பிரித்து ஆண்டவர் இயேசுவண்டை வழிநடத்துவதாகும். இவ்வளவு காலமும் மிஷனரிமாரிடமிருந்த திருச்சபையின் தலைமைத்துவத்தை ஆபிரிக்க மக்கள் இப்போது பொறுப்பேற்று பணிபுரிந்து வருகின்றனர். திருச்சபை ஆராதனைகளில் மக்கள் திரள் தமது தேசிய மொழியில், தேசிய மேளவாத்தியம்


(தொடர்ச்சி 3 பக்கம் பார்க்க)

## இருண்ட கண்டத்தில்........

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

களுடன் பாடி ஆடுவர். ஆராதனைகளில் இளம் ஆண்களும் பெண்களும் சாட்சி கூறி பாட்டுப் பாடி செபிப்பர். ஆலயங்களில் ஆங்கிலத்திலும் தேசிய மொழிகளிலும் நடைபெறும் ஆராதனைகளில் திரளாக ஆபிரிக்க மக்கள் காணப்படுவர். எல்லா அரசாங்கப் பாடசாலைகளிலும் அரசியல் மாநாடுகளிலும் பாட்டு, வேதப் படிப்பு, அருளுரை, செபத்துடன் ஆரம்பிக்கப்படுவது நாட்டின் கிறிஸ்தவ நோக்கை பிரதிபலிக்கிறது. வானொலி, தொலைக்காட்சி ஆகிய சாதனங்களில் கிறிஸ்தவ நிகழ்ச்சிகள் அனேகம் இடம்பெறுதல் மகிழ்ச்சிக்குரிய தாகும்.

### ஆபிரிக்க சபையின் பிரச்சனைகள்

திருச்சபை எண்ணிக்கையில் வளர்ந்த போதிலும், பல்வேறு சமூகப் பிரச்சனைகள் கிறிஸ்தவ வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாகவுள்ளது. ஒரு கணவனுக்குப் பல மனைவிகள் (Polygamy), ஆண்கள் சீதனம் (Lobola) கொடுத்து மனைவியை வாங்குதல், பரந்த குடும்பங்கள் (Extended families) ஆண்கள்-பெண்கள்-பிள்ளைகள் பெருமளவில் மது அருந்துதல், அஞ்ஞானக் கொள்கைகளும் மருந்துகளும் (Witch craft) பாடசாலைப் பெண்கள் இளம் தாயாகுதல். குடும்பங்கள் பிளவுபடல் (Divorce) போன்ற பல்வேறு சமூகக் குறைபாடுகளைத் தகர்த்தெறியத் திருச்சபை இப்போது அரும்பாடு பட்டு வருகின்றது.

### வை. எம். சீ. ஏ. இயக்கம்

திருச்சபையின் அங்கமாகிய வாலிபக் கிறிஸ்தவ சங்கம் (YMCA) இந்நாட்டில் படிப்படியாக வளர்ச்சியடைந்து வருகின்றது. இக்கட்டுரையாளர் வசிக்கும் கப்வே என்னும் பட்டினத்தில் 1981-ம் ஆண்டு வை. எம். சீ. ஏ. தாபிக்கப்பட்டு சிறப்பாக இயங்கிவருகின்றது. இவ்வியக்கத்தினால் ஆபிரிக்க இளைஞர்களுக்கு பல்வேறு தலைமைத்துவப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது. இவ்வியக்கத்தின் தற்போதைய ஆபிரிக்க செயலாளர், இந்தியாவில் பங்களூர் நகரிலுள்ள வை. எம். சீ. ஏ. பயிற்சி நிலையத்தில் பயிற்றப்பட்டு வருகின்றார்.

சம்பியா நாட்டின் தேசிய வை. எம். சீ. ஏ. இயக்கத்திற்கு இந்தியா, இலங்கை உட்பட்ட பல்வேறு வை. எம். சீ. ஏ. இயக்கங்கள் உதவியளித்து வருகின்றன. இவ்வியக்கத்தின் போஷகர் இந்நாட்டின் ஜனாதிபதியாகும். வை. எம். சீ. ஏ. இயக்கமானது தலைமைத்துவப் பயிற்சிகள் மூலம் நாட்டிற்கு இன்றியமையாத தலைவர்களை எழுப்பும் பணியில் சேவை புரிந்து வருகின்றது.

### முடிவுரை

சம்பியா நாட்டின் மதிப்புக்குரிய ஜனாதிபதி டாக்டர் கெனத் கவுண்டா அவர்கள் தம்மைத் தத்தம் செய்த கிறிஸ்தவராகும். ஓர் ஸ்கொத்தலாந்துத் திருச்சபைப் போதகரின் புதல்வனாவார். மிக எளிமையான கிறிஸ்தவக் குடும்பத்தில் வளர்க்கப்பட்டு, நாட்டின் விடுதலை இயக்கத்தில் ஆயுதமற்ற போராட்டத்திற்குத் தலைமைதாங்கிய சிறந்த வீரர் அவர். இந்நாட்டின் 73 கோத்திர மக்களை "ஒரு சம்பியா — ஒரு நாடு" (one Zambia one Nation) என்னும் மகுட மொழிக்கமைய ஒன்றிணைத்து, மானிடப் பண்பு சமுதாயத்தை உருவாக்கச் சேவைபுரிந்து வருகின்றார். நாட்டின் எல்லா மக்களையும் "இன, நிற, சாதி, கோத்திர சமய வேறுபாடின்றி, இறைவனின் கீழ் சகோதரராக வாழ வகுப்பதே என் நோக்கு" என்று இப்பெரியவர் அடிக்கடி கூறுவார்.

இவ்வாறு கிறிஸ்துவின் ஜீவ ஒளி இருளிலே சுடர்விட்டு எரிந்த ஆபிரிக்க கண்டத்தில் கிறிஸ்துவின் தாசரை ஆங்காங்கு எழுப்புவது ஆண்டவரின் தூதுப்பணியை வெளிப்படுத்துகிறது. கிறிஸ்துவின் தூய ஆவி இவ்வாறு ஆபிரிக்க மக்களுள் மென்மேலும் செயற்பட நாம் பிரார்த்திப்போமாக.

(நன்றி: கலைமதாங்கி)

## வெள்ளை வேட்டிகளில் வாழும் கறுப்பு மனிதர்களுக்கு ஒரு சிவப்புச் சிக்னல் !!

வி. எஸ் நீதிதேவன்
(யாழ். கல்லூரி)

பிச்சைக்காரர்கள்,
இது சமுதாய சந்தையில்
வெள்ளை வேட்டிகளில் வாழும்
சில கறுப்பு மனிதர்கள் எங்களுக்கு
சூட்டிய செல்லப்பெயர்
சமுதாய கங்கைகளில் தண்ணீர்
குடிக்கும் போதுதான்
மிருகங்கள் காட்டிலிருந்து
நாட்டுக்குள் வந்து நாழியானது
தெரிகிறது.
வசந்த ராகங்கள் எங்களை
விவாகரத்துச் செய்தபோது
பட்டினி ராகமே எங்களுள்
பரிணமித்துக் கொண்டது.

தேசங்களின் தெருக்களுக்கெல்லாம்
சுடர்விளக்குகள் கொடுத்த
தியாகச் சீலர்கள் — இன்று
நாற்றமெடுக்கும் சந்திகளில்
சிலையாக சமைந்ததனால்
எங்களின் வயிற்றின்
வினாக்களுக்கு விடைகாண
மறுத்தனரோ.

ஏ மனிதர்களின் எண்ணங்களினுள்
தீய்ந்துபோன தேசமே!!
உன்செவிட்டுக்கு என் அறைகூவல்,
நான் ஒரு பிச்சைக்காரன்,
எனது பெயரும் அதுதான்,
நான் என் தாயின்
கருப்பைக் கோட்டையில்
உருவெடுத்துக் கொண்டிருந்தபோது
கள்ளச் சாரயத்தை
கலப்பு மணம் புரிந்ததனால்
சொர்க்க வாசலுக்கு — ரம்பையை
காணச் சென்றுன் பெயர்
தெரியா என் தந்தை
சிவப்பு விளக்கின் சிக்னலாக
நான் பிறந்த காரணத்தால்
தவழ வேண்டிய வயதில்
என்னை ஓர் குப்பைத்தொட்டி
தத்தெடுத்துக் கொண்டது.
நான் பிறக்கக் காரணமாயிருந்த
உயிருள்ள மிருகங்களை விட
நான் வளரக் காரமாயிருந்த
எச்சிலையின் பண்டகசாலையே
இரக்கமுள்ளது.
சமுதாயச் சாலையில் — நான்
தவழ்ந்த போதும்,
எனக்கு மன்னிப்பளிக்க
மனிதர்களுக்கு
மனமில்லை — ஏனென்றால்
குற்றத்தின் குடியிருப்புகள்
என்னவென்று — என்னை
மன்னிப்பது
கல்விச்சாலைகளின் கதவுகள்
எங்களுக்காக அடைக்கப்
பட்டதனால் — அறிவு
எங்களுடன்
கோபித்துக் கொண்டது
தாய்கள் செய்த
தவறுகளுக்காக
கணக்குக் காட்டவென்றே
புன்பிக்கப்பட்டவர்கள்
நாங்கள் — அதனால்
கணக்கில்லாமல் இன்று
தெருக்களில் வாசம்
செய்கின்றோம்.
வானத்துக் கன்னி
எம்மைப் பார்த்துக்
கண்ணீர் சிந்தும்போதும்,
சூரியப் புத்திரன் தன்
வெம்மைக் கிரணங்களினால்
எம்மை வினவும் போதும்
பனித்துளிகள் எம்மைக்
கண்டு பரிகசிக்கும்
போதும்
இருள் குமாரி
எம்மைக்கண்டு
குதூகலிக்கும் போதும்
சுயநலமிக்க இறைவனை
நொந்து கொண்டே
தெருவோரத்து
திண்ணைகளிலும்
வீதியோரத்து
விருந்தைகளிலும்
இருவின் இரக்கமின்மையால்
முகவரியில்லாத கடிதங்கள்
போல — ஒரு
தங்கவிடியலுக்காக
தவம்கிடக்கின்றோம்.
காந்தி, இந்தமண்ணிற்கு—நீ
மறுபடியும்
வந்தால்
நிச்சயம் தற்கொலை
செய்துகொள்ள வேண்டும்
இந்தமனிதர்கள்
உன்னை தூக்கி
எறிந்து இன்றுடன்
கால் நூற்றுண்டாகிறது—அதனால்
மீண்டும் ஒரு
காந்தி இந்த
பாழும் மண்ணுக்குவேண்டாம்
ஏனென்றால்
மகாத்மாக்களைவிட
கோட்சேக்களே
இங்கு அதிகம்.

(தொடரும்)

## அருளுரை பற்றிய சில கருத்துக்கள்

அருளுரை என்பது, ஆலயத்தில் கூடியிருக்கும் அடியார்களுக்குத் திருமறையினுள்ள ஒரு வசனம் அல்லது ஒரு பொருள் பேரில் ஒருவர் ஆற்றும் சமயச் சொற்பொழிவென்றே பெரும்பாலும் கருதப்படுகிறது. ஆனால், இதன் மூலச் சொல்லிற்கு இதற்கு மாறான கருத்துண்டு.

அதாவது, ஒரு தூதுவன் பகற்காலத்தில் எக்காளச் சத்தத்துடன் மிகச்சத்தமாய் நகர மக்களுக்கு அரசனின் செய்தியை அறிவிப்பதைச் சுட்டும் கிரேக்கச் சொல்லே, புதிய ஏற்பாட்டில் அருளுரை ஆற்றுதலைக் குறிக்கும் சொல்லாகும். ( I கொ . 1 : 26; I யோவான். 1 :3., லூக் 9:60).

ஆகவே, தற்செய்தியை எடுத்துக் கூறுவது பல்வகைப்பட்ட போதனைகளில் ஒன்றெனக் கருதக் கூடாது. அது உலகச் சிக்கல்களைத்தீர்ப்பதற்குக் கூறப்படும் அறிவுரைகளில் ஒன்றும் அல்ல. எல்லார் மீதும் ஆளும் உரிமை படைத்த அரசர் யாவருக்கும் அளிக்கும் அறிவிப்பே அருளுரை.

அருளுரைஞன் தூதுவன் ஆவான். அவன் தன் சொந்தக் கருத்துக்களைக் கூறுமல் தனக்குத் தரப்பட்ட செய்தியை உள்ளவாறே எடுத்து வழங்க வேண்டும். தன்னில் தானே அவன் மதிப்பற்றவன். எனினும், செய்தியைச் சுமப்பவனுதலால அதற்குரிய அதிகாரம் உடையவன் ஆவான். பிறரைவிட அருளுரைஞன் நன்னெறி வாழ்க்கையில் ஒருபடி உயர்ந்தவன் எனக் கருதுவதற்கும் இடம் இல்லை. யாருக்கு அவன் பணியாள் (2 கொ. 4:5). அவனுடைய உள்நோக்கம் குறையுடையதாய் இருந்தாலும் கிறிஸ்துவை அவன் தன் அருளுரையில் வழங்குவதே பெரிய செயல் (பிலி. 1 : 15-18).

இதன் பொருள் அவனுடைய வாழ்க்கை அவனுடைய அருளுரைக்கு ஏற்ப இருக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதன்று. அருளுரைக் கிசைந்த வாழ்க்கை இல்லையெனில் பிறருக்கு அருளுரை ஆற்றுகிறவனே ஆகாதவன் என்று கடவுளால் தள்ளப் படலாம். (I கொ. 9: 27; I தீமோ. 3:1-7; 2 தீமோ. 4:5).

அருளுரை இறைவனின் தூண்டுதலால் ஆற்றப்படுகிறது. அதன் பொருள் கடவுளின் செயல், குறிப்பாகக் கிறிஸ்துவில் அவர் நடப்பித்துள்ள செயல். ஆகவே அருளுரையைக் கடவுளின் வார்த்தை எனஏற்றல் வேண்டும் (மத். 10:40; லூக். 10 : 16).

அருளுரை என்றால் கிறிஸ்துவை எடுத்துரைப்பது எனலாம (அப. 8:5; பிலி. 1:15-18). அருளுரையின் ஒரே பொருள் கிறிஸ்துவே மீட்புச் செயலில் மையமாக விளங்கும் நிகழ்ச்சிகளாகிய அவருடைய மரணமும் உயிர்த்தெழுதலுமாக இருப்பதால் அருளுரையில் இவை சிறப்பிடம் பெறுகின்றன. (I கொ. 1 : 17-25; 15 : 12-20; ரோ. 4:25).

ஆகவே, வார்த்தை அல்லது பேச்சு (நற்செய்தி அறிவிப்பு) மீட்பு நிகழ்ச்சியிலிருந்து பிரித்தெடுக்க முடியாததொன்றாகும் (2 கொ. 5: 19; கொ. 1 : 21).

— பேராயர் ஜோர்ஜ் தேவதாஸ்

## செய்திகள்

● "சற்றடே றிவியு" — அவசரகால நிலைமையின்கீழ் தடை செய்யப்பட்டு 228 நாட்களுக்குப் பின்னர், 'சற்றடே றிவியூ' என்ற ஆங்கில வார இதழ் மீண்டும் வெளிவந்துள்ளது இதன புதிய ஆசிரியராக திரு. காமினி நவரத்தின, முன்னுள் ஆசிரியர் திரு. எஸ். சிவநாயகம் திரும்பிவரும் வரை கடமையாற்றுவாரெனத் தெரிகிறது. 1983 ஜூலை 28-ம் திகதி தொடங்கிய இப்பத்திரிகை 1983 ஜூலை முதலாம் திகதி அரசாங்கத்தினுல் தடைசெய்யப் பட்டது.

● இரண்டாயிரம் ஆண்டில் பஞ்சம் — அடுத்த 16 ஆண்டுகளுக்கும் 2,000 ஆண்டில், கடும பஞ்சம் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் ஏற்படும் என்றும், இக்கடும் பஞ்சத்தினுல் 85 கோடி மக்கள் பாதிக்கப்படுவார்கள். ஆண்டு தோறும் 60,000 கிலோ மீட்டர் காணி பாலைவனமாகின்றது. இதனைத் தடுக்கவேண்டுமானுல் 9,000 கோடி அமெரிக்க டாலர் செலவாகும் என்று சூடானைச் சேர்ந்த ஐ. நா. நிபுணரொருவர் தெரிவித்துள்ளார்.

● யாழ். மாவட்டத்தில் விற்பனை செய்யப்படும் வெளிநாட்டுப் புத்தகங்கள், பத்திரிகைகள் சஞ்சிகைகள் போன்ற சகல வெளியீடுகளுக்கும் விலைக்கட்டுப்பாடு நிர்ணயம செய்யப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன.

● இத்தாலியில் ரோமன் கத்தோலிக்க மதம் தொடர்ந்து அரசாங்க மதமாக இருக்கமாட்டாது. இத்தாலிய அரசாங்கமும், ரோமன் கத்தோலிக்க உயர் மத பீடமுமான வத்திக்கானும் இந்த வார முற்பகுதியில் இது தொடர்பான ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டன,

● அண்மையில் ஏற்பட்ட வெள்ள அழிவின்போது தொண்ணூறு லட்சம் புசல நெல் சேதமடைந்துள்ளதென்று கொழும்பு கமத்தொழில் பயிற்சி நிலையம் மதிப்பிட்டுள்ளது. முன் ஒருகாலத்திலும் இல்லாதவாறு பெப்ரவரி மாதத்தில் பெருமழை பெய்ததனுல் இத்தகைய பலத்த சேதங்கள் ஏற்பட்டுள்ளது.

## Hartley College

The Golden Anniversary of the Hartley College Old Boys Association was celebrated on Saturday (18-2-84) at Hartley College. At the Public Meeting held in the School Hall. Mr. S. Anandakumaraswamy, High Court Judge, Anuradhapura and Mr. S. Kandasamy the were Chief Speakers. The Principal of Hartley College. Mr. W. N. S. Samuel proposed the Vote of Thanks.

## Displaced Undergrads

Dr, Stanley Kalpage Secretary, Ministry of Higher Education and Chairman, University Grants Commission. told the Committee on Displaced Tamil University students that be would place before the Minister of Higher Edueation the details of the discussion. He also told the Committee that the decision of the government regarding the request made by the students would be conveyed to them as early as possible.

Dr. Kalpage conveyed these decisions when the Committee met on 5-2-84. Others present at Wednesday's meeting were the Vice Chancellor, Jaffna University and three students. The Director, Batticaloa University College was not present. He had excused himself for his inability to come to Colombo owing to floods. The Ministry release said:

The students presented details of the Tamil students from the Universities of Colombo, Peradenia and Moratuwa seeking admission to the University of Jaffna and to the Batticaloa University College for each year of study, both in the disciplines that are available in these Institutions and in disciplines for which new faculties departments of study would have to be set up. The Vice-Chancellor of the University of Jaffna indicated the extent to which the University of Jaffna could admit students in these disciplines in each of the years concerned. Smilar information was available to the Committee from the Director, Batticaloa University College.

**Displaced Tamil Engineering Students**

The displaced Tamil Engineering students from the Universities of Peradeniya and Moratuwa—120 in number—have requested the Vice-Chancellor of the Jaffna University to make provision for some lectures in English temporarily for them in the Jaffna Uniersity till a decesion is arrived at by the UGC. The matter, we learn, is under consideration.

## Cabinet reshuffle?

Political circules in the city on Sunday were speculating on the possibility of Cabinet changes in the near future. Some expect a reshuffle before the opening of the next sessions of parliament on February 23. Other sources hinted that there may a reduction in the number of ministries.

## Advanced Level Examination Sept. 1983

The results of the above examination is expected to be released by the first week of March. Some 150,000 candidates sat for this examination.

## Bank changes in Dubai don't affect Colombo branch

Mr. A. N. R. Mc Harg, General Manager of the Union Bank of the middle East Ltd. Colombo, said yesterday that the change in the board of the UMBE Dubai. 'in no way affected the operations of the Branch in Colombo.'

He said: Mr. A. Galadari resigned from the board of the Union Bank of the Middle East Limited and a new board was appointed on November 12, 1983.

"The new chairman, of the bank is Mr. Ahmed Humaid Al-Tayer, who is minister of State for Finance & Industry in the United Arab Emirates, The bank has the full financial backing of the Central Bank of the United Arab Emirates, and is considered undoubted for its Commitmets."

## Coconut Crisis

The coconut crisis is expected to be with us this year too.

Nut production fell by 10 per cent last year and is estimated to plummet by a further six to seven per cent in the current year.

"The best we can hope to achieve. weather permitting, is last year's level of production", Coconut Industries Ministry Secretary, D. Wijesinghe, said.

Last year production fell to 2250 million nuts from 2,500 million in 1982. In the current year it is expected to slide to 2100 million, barely 30 million higher than the country's annual consumption.

With a rising world market price for coconut products (currently it is around 1200 US dollars) and exporters scraping the barrel to earn foreign exchange, the prospect of the coming coconut season bringing price relief to hardpressed house-wives is dim, say coconut millers.

Over 60-odd coconut millers and 65 desiccated coconut manufacturers have put up their shutters, depriving their workforce of employment, Mr, Wijesinghe said November to March is a lean time for coconut millers but this year is expected to be exceptionally bad.

The BCC and the Coconut Development Authority which together hold a stock of about 2500 tonnes of oil have begun to release small quantities to prevent the oil price soaring. This exercise will be continued till March, Mr. Wijesinghe said.

## SLFP won't take part in all party Talks

The Sri Lanka Freedom Party has decided not to participate in the all party conference.

SLFP sources told the "Daily News" that at Saturday's Central Committee meeting held on 15-2-84 at the party headquarters, party president Mrs. Sirima Bandaranaike informed the CentralCommittee that Mr. Felix Dias Abeyasinghe, Secretary to the all party conference, had met her and explained the statements made by Mr. A. Amirthalingam, secretary general of the TULF. The sources said that the Central Committee had considered this and decided not to participate in the all party conference and endosed its earlier decision to abstain from taking part in the meetings of the all party conference.

[CDN 20-2-84]

## Call to Curtail Air Lanka Flights

Dr. T. R. Janarthanan member of the Legislative Council of Tamil Nadu and President World Tamil Youth Federation has urged the Central Government of India to allow Air Lanka to land in only one place in India if the Sri Lanka Government did not permit the revival of the Tiruchi-Jaffna Indian airline service.

In a telegram to Mr. M. M. Kohil, Secretary Union Civil Aviation Ministry in New Delhi Dr. Janarthanan said "we have a legitimate right to touch a number of places as airlines of other countries are touching our land. Air Lanka is touching four places, but we are landing at only one place - Colombo Ninenty per cent of the passengers travelling to Colombo have to go from Jaffna by train or bus in the present serious situation. If the Sri Lanka Government's anti-Tamil attitude prevents our claims, recommend to the Government to stop Air Lanka from landing at more than one place in India."

Capt, Rakkita Wickremanayake Chairman of Air Lanka, when asked for his comments told "The Island" "going on this principle it may be interesting for Mr. Janarthanan to asked the Indian Government why British Airways is allowed to land in Bombay, New Delhi and Culcutta while Air Lanka is allowed to land at Heathriw airport in London and why Thai airways is allowed to land in New Delhi and Culcutta while Air India lands only in Bangkok. The reason for not giving permission for Indian Airlines to fly from Tricy to Jaffna is because the runway is in poor shape there are no facilities for customs clearances, no facilities for landing at night and also because under the present circumstances it is not advisable for security reasons.

*Island 16-2-84*

*Editor's Note:*

The reasons given for the refusal of Indian Aireline's request for landing rights at Palaly interesting. A few years ago Air Ceylon was operating the Jaffna—Trichy line without too much difficulty.

## Memorial Service

The Chief Justice, Mr. Neville Samarakone paid the tribute and the Bishop of Colombo, the Rt. Rev. Swithin Fernando preached the Sermon at the Memorial Service held on 18-2-84 to the late Mr. K. A. Pullenayagam at Christ Church. Galle Face.

## Drop in tourist arrivals

The total number of foreign visitors last year was 337,342. The total number of tourists that atrived here in 1982 was 407,230.

A spokesman for the Ceylon Tourist Board attributed this decrease in the number of arrivals to the July disturbances last year. The highest arrival figure of tourists last year was 49,104 in January and the lowest was 8,430 in August.

*Excerpt from the Morning Star Dated Jan. 7 1841 No. 1*

**TERMS**

The Morning Star will be devoted to Education, Science and general literature and to the dissemination of articles on Agriculture, Government, and Religion, with a brief summary of important News.

## Impressions on Church Life in Japan by a Fellow Asian

**By Rev. Andar Ismail**

*(Continued from our 3-2-84 issue)*

**A Bonsai Church**

A newcomer to Japan will quickly realise that the Japanese are very fast in everyehing they do. They walk fast. They work fast. However there are two exceptions, two things that take a long time in Japan. The first one is the Tea Ceremony. And the second is the growth of the church.

Of course, the life of the cannot be measured mearly by the increase in membership. However, if the growth indicates slowness, does not that incicate the need for the church to re-evaluate its methods of work? It's definite that the slow growth of the Japanese church is not caused by stress or by obstacles. Compared with other Asian churches, the Japanese church now enjoys many advantages. It's relationship with the government is good, and the Japanese church is in the midst of a community that is tolerant towards the church. In other Asian countries people are often afraid to accept gifts of a Bible. In Japan, Bibles are openly sold even in general bookshops. The openness towards Christianity also shows up in Sunday School with eighty children, sent by their non-Christianity parents. The fact that in Japan three million people claim to be Christians, whereas not more than half the number are church members, also indicates that Christianity is not a religion that is shunned by the Japanese. Also, surely it must be unique that nearly two-thirds of the theological students at Doshisha are not Christians. Now the problem is, are all these unique features just mentioned really being used by the church as an opportunity for the giving out of the Gospel? The fact that there is no opposition or obstacle toward the church certainly gives tranquillity and freedom of action to the church. But on the other hand such tranquillity can also cause the church to be too much at ease. It lives saftly, without many challenges. The result is that it has little spirit to struggle. It is too protected. It is like a bonsai tree in a house that will grow slowly; or does it feel called to be a bamboo tree in a tree realm that will grow much faster, both in quantity and in strength?

*(to be continued)*

*Registered as a Newspaper at the G.P.O., Sri Lanka under No. QB./59/300/26/82.*
Printed for the Jaffna Diocese of the Church of South India at Sri Sanmuganatha Press, Kankesanthurai Road, Jaffna on Friday, 24th February, 1984 and published by Mr. Alfred Mathuranayagam Brodie of Jaffna College Flats, Vaddukoddai.